## இனிமையான குழந்தைகளே! நீங்கள் ஞானத்தின் மழை பொழிந்து பசுமை ஏற்படுத்தக் கூடியவர்கள், நீங்கள் தாரணை செய்ய வேண்டும் மற்றும் மற்றவர்களை செய்விக்க வேண்டும்.

கேள்வி: எந்த மேகங்கள் மழை பொழிவதில்லையோ அவைகளுக்கு என்ன பெயர் கொடுக்கலாம்?

பதில்: அவை சோம்பேறி மேகங்களாகும். மழை பொழியக் கூடியது சுறு சுறுப்பான மேகங் களாகும். தாரணை இருந்தது என்றால் மழை பொழியாமல் இருக்க முடியாது. தாரணை செய்து பிறரை செய்விக்காதவர்களின் வயிறு ஒட்டிப் போகும், அவர்கள் ஏழைகள் ஆவார்கள். பிரஜையில் சென்று விடுகின்றனர்.

கேள்வி: நினைவின் யாத்திரையில் முக்கியமான முயற்சி எது?

பதில்: தன்னை ஆத்மா என புரிந்து கொண்டு தந்தையை புள்ளி வடிவில் நினைவு செய்வது, தந்தை யாராக இருக்கிறாரோ, எப்படியாக இருக்கிறாரோ அதே சொரூபத்தில் சரியாக நினைவு செய்வதில்தான் உழைக்க வேண்டியுள்ளது.

பாடல்: யார் தலைவனுடன் இருக்கின்றனரோ. . . .

ஓம் சாந்தி. கடலுக்கு மேலே மேகங்கள் இருந்தால் மேகங்களின் தந்தையாக இருப்பது கடல். கடலுக்கு மேல் இருக்கும் மேகங்களுக்குத்தான் மழைநீர் நிரம்பும். அந்த மேகங்களும் கூட நீரை நிரப்பிக்கொண்டு பிறகு மழையாகப் பொழிகின்றன. நீங்களும் கூட கடலிடம் நிரப்பிக்கொள்வதற் காக வருகிறீர்கள்.

கடலின் குழந்தைகள் மேகங்களாக இருக்கிறீர்கள், இனிமையான நீரை உறிஞ்சி கொள்கிறீர்கள். இப்போது மேகங்கள் கூட பல விதமாக இருக்கின்றன. சில மிகவும் நன்றாக அடர்ந்த மழையாகப் பொழிகின்றன, வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தி விடுகின்றன. சில குறைவாகப் பொழிகின்றன. உங்களிலும் கூட அப்படி வரிசைக்கிரமமாக இருக்கிறீர்கள், நன்றாக கன மழை போல் பொழிகிறார் கள், அவர்களின் பெயர் கூட பாடப்படுகிறது. நன்றாக மழை பொழிந்தால் மனிதர்கள் மிகவும் மகிழ்கின்றனர். இதுவும் கூட அது போலாகும். நன்றாகப் பொழிபவர்களின் மகிமை ஏற்படுகிறது, யார் பொழிவதில்லையோ அவர்களின் உள்ளம் சோம்பலாகி விடுகிறது, வயிறு நிரம்புவதில்லை. முழுமையாக தாரணை ஏற்படாததால் வயிறு ஒட்டிப் போய்விடுகிறது. பஞ்சம் ஏற்படும்போது மனிதர்களின் வயிறு ஒட்டிப்போய் விடுகிறது. அதுபோல் இங்கும் கூட தாரணை செய்து பிறரை செய்விக்கா விட்டால், வயிறு ஒட்டிக் கொண்டுவிடும். நன்றாகப் பொழிபவர்கள் சென்று இராஜா இராணி ஆவார்கள், இவர்கள் ஏழைகளாக ஆவார்கள். ஏழைகளின் வயிறு ஒட்டிக் கிடக்கும். ஆக, குழந்தைகள் மிகவும் நன்றாக தாரணை செய்ய வேண்டும். இதிலும் கூட ஆத்மா மற்றும் பரமாத்மாவின் ஞானம் எவ்வளவு சகஜமானது! நமக்குள் ஆத்மா மற்றும் பரமாத்மாவின் ஞானம் இருக்கவில்லை என்பதை இப்போது நீங்கள் புரிந்திருக்கிறீர்கள். அதாவது வயிறு ஒட்டியிருந்தது அல்லவா! ஆக, ஆத்மா மற்றும் பரமாத்மாவின் விஷயம்தான் முக்கியமானது. மனிதர்கள் ஆத்மா வையே அறியவில்லை எனும்போது பிறகு பரமாத்மாவை எப்படி அறிந்து கொள்ள முடியும்? எவ்வளவு பெரிய வித்வான்கள், பண்டிதர்கள்

முதலானவர்கள் இருக்கின்றனர், யாருக்கும் ஆத்மாவைப் பற்றி தெரியாது. இப்போது உங்களுக்குத் தெரிந்து விட்டது - ஆத்மா அழிவற்றது, அதில் 84 பிறவிகளின் அழிவற்ற நடிப்பு அடங்கியுள்ளது, அது நடந்தபடி இருக்கிறது. ஆத்மா அழிவற்றது, ஆகவே நடிப்பும் அழிவற்றது. ஆத்மா எப்படி ஆல் ரவுண்ட் (முழு சக்கரத்திலும்) நடிப்பை நடிக்கிறது - இது யாருக்கும் தெரியாது. அவர்களோ ஆத்மாவே பரமாத்மா என்று சொல்லி விடுகின்றனர். குழந்தைகளாகிய உங்களுக்கு ஆரம்பத்திலிருந்து தொடங்கி, கடைசி வரையிலான முழுமையான ஞானமும் இருக்கிறது. அவர்கள் நாடகத்தின் ஆயுளையே இலட்சக் கணக்கான வருடங்கள் என்று சொல்லி விடுகின்றனர். இப்போது உங்களுக்கு முழு ஞானமும் கிடைத்திருக்கிறது. தந்தையால் உருவாக்கப்பட்ட ஞான யக்ஞத்தில் முழு உலகமும் ஸ்வாஹா (அர்ப்பணம்) ஆகவுள்ளது என நீங்கள் அறிவீர்கள். ஆகையால் தேகத்துடன் சேர்த்து அனைத்தை யும் மறந்து விடுங்கள், தன்னை ஆத்மா என புரிந்து கொள்ளுங்கள். தந்தையை மற்றும் சாந்தி தாமம், இனிமையான வீட்டை நினைவு செய்யுங்கள். இது துக்க தாமமே ஆகும். உங்களிலும் கூட வரிசைக்கிரமமான முயற்சியின்படி புரிய வைக்க முடியும். இப்போது நீங்கள் ஞானத்தால் நிரம்பியிருக்கிறீர்கள். மற்றபடி முழு முயற்சியும் நினைவு செய்வதில் இருக்கிறது. பிறவி பிறவிகளின் தேக அபிமானத்தை நீக்கி ஆத்ம அபிமானி ஆக வேண்டும், இதில் தான் உழைக்க வேண்டியுள்ளது. சொல்வது மிகவும் எளிதே, ஆனால் தன்னை ஆத்மா எனப் புரிந்து கொள்ள வேண்டும் மற்றும் தந்தையையும் புள்ளி ரூபத்தில் நினைவு செய்ய வேண்டும், இதில் உழைப்பு தேவைப்படுகிறது. நான் யார், எப்படி இருக்கிறேன், அப்படி என்னை நினைவு செய்வது மிகவும் கடினமானது. தந்தை எப்படியோ குழந்தைகளும் அப்படித்தான் இருப்பார்கள் அல்லவா? தன்னைத் தெரிந்து கொண்டால், பின் தந்தையையும் தெரிந்து கொண்டு விடுவார்கள். படிப்பிப்பவர் ஒரு தந்தைதான், படிப்பவர்கள் பலர் என்பதை நீங்கள் அறிவீர்கள். தந்தை இராஜ்யத்தை எப்படி ஸ்தாபனை செய்கிறார் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் தான் அறிந்துள்ளீர்கள். மற்றபடி இந்த சாஸ்திரங்கள் முதலானவைகள் அனைத்தும் பக்தி மார்க்கத்தின் விசயங்கள். புரியவைப்பதற்காக நாம் சொல்ல வேண்டியிருக்கிறது. மற்றபடி இதில் வெறுப்படையும் விஷயம் எதுவும் இல்லை. சாஸ்திரங்களிலும் கூட பிரம்மாவின் பகல் மற்றும் இரவு என்று கூறுகின்றனர், ஆனால் புரிந்து கொள்வதில்லை. இரவு மற்றும் பகல் பாதிப் பாதியாக உள்ளது. ஏணிப்படிகள் வைத்து எவ்வளவு சகஜமாக புரிய வைக்கப்படுகிறது?

பகவான் மிகவும் சக்தி வாய்ந்தவர், அவர் விரும்பினால் எது வேண்டுமானாலும் செய்ய முடியும் என்று மனிதர்கள் புரிந்து கொள்கின்றனர். ஆனால் நானும் நாடகத்தின் பந்தனத்தில் கட்டப் பட்டிருக்கிறேன் என்று தந்தை கூறுகிறார். பாரதத்தில் எவ்வளவு ஆபத்துகள் வந்தபடி இருக் கின்றன, பிறகு நான் அடிக்கடி வருகிறேனா என்ன? எனது நடிப்புக்கு எல்லை இருக்கிறது. முழுமையாக துக்கம் ஏற்பட்டு விடும்போது நான் எனது நேரத்தில் வருகிறேன். ஒரு வினாடியும் வித்தியாசப்படுவதில்லை. நாடகத்தில் ஒவ்வொருவரின் துல்லியமான நடிப்பும் பதிவாகியுள்ளது. இது உயர்ந்த தந்தையின் அவதாரம் ஆகும். பிறகு வரிசைக்கிரமமாக சக்தி குறைந்தவர்கள் அனைவரும் வருகின்றனர். குழந்தைகளாகிய உங்களுக்கு இப்போது தந்தையிடமிருந்து ஞானம் கிடைக்கிறது, நீங்கள் உலகின் எஜமான் ஆகிறீர்கள். உங்களுக்குள் முழு

வேகத்துடன் சக்தி வருகிறது. முயற்சி செய்து நீங்கள் தமோபிரதானத்திலிருந்து சதோ பிரதானம் ஆகிறீர்கள். மற்றவர்களுடைய நடிப்பே அங்கே கிடையாது. முக்கியமானது நாடகம், அதன் ஞானம் இப்போது உங்களுக்கு கிடைக்கிறது. மற்ற அனைத்துமே ஸ்தூலமானது, ஏனெனில் அவையனைத்தும் இந்த கண்களால் பார்க்கப் படுகிறது. உலக அதிசயம் பாபா ஆவார், அவர் பிறகு சொர்க்கத்தைப் படைக்கிறார், அதனை ஹெவன், பாரடைஸ் எனக் கூறுகின்றனர். அதற்கு எவ்வளவு மகிமை உள்ளது! தந்தை மற்றும் தந்தையின் படைப்பிற்கு மிகவும் மகிமை உள்ளது. உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பகவான். உயர்ந்ததிலும் உயர்ந்த சொர்க்கத்தின் ஸ்தாபனையை தந்தை எப்படி செய்கிறார் என்பது யாருக்கும் எதுவும் தெரியாது. இனிமையிலும் இனிமையான குழந்தைகளாகிய நீங்களும் கூட வரிசைக்கிரமமான முயற்சியின் படி அறிவீர்கள் மற்றும் அதன் அடிப்படையில் தான் பதவியும் அடைகிறீர்கள், யார் முயற்சி செய்கின்றனரோ, அது நாடகத்தின்படிதான் செய்கின்றனர். முயற்சி இன்றி எதுவும் கிடைக்காது. கர்மம் செய்யாமல் ஒரு வினாடியும் இருக்க முடியாது. அந்த ஹடயோகிகள் பிராணாயாமம் செய்கின்றனர், ஜடத்தைப் போல் ஆகிவிடு கின்றனர், உள்ளே கிடப்பார்கள், மேலே மண் சேர்ந்து விடும். மண் மீது மழை விழும் போது புல் முளைத்து விடுகிறது. ஆனால் இதனால் எந்த இலாபமும் கிடையாது. எவ்வளவு நாள் இப்படி அமர்ந்திருக்க முடியும்? கர்மம் கண்டிப்பாக செய்யத்தான் வேண்டும். கர்ம சன்னியாசியாக யாரும் ஆக முடியாது. ஆம், உணவு முதலானவை தயாரிப்பதில்லை, ஆகையால் அவர்களை கர்ம சன்னியாசி என்று சொல்லி விடுகின்றனர். நாடகத்தில் அவர்களுடைய இந்த நடிப்பும் உள்ளது. இந்த துறவற மார்க்கத்தவர்களும் கூட இல்லாவிட்டால் பாரதத்தின் நிலை என்ன ஆவது? பாரதம் முதல் நம்பர் தூய்மையானதாக இருந்தது. தந்தை முதன் முதலாக தூய்மையை ஸ்தாபனை செய்கிறார். அது பிறகு அரை கல்ப காலம் நடக்கிறது. சத்யுகத்தில் ஒரு தர்மம், ஒரு இராஜ்யம் இருந்தது. பிறகு தெய்வீக இராஜ்யம் இப்போது மீண்டும் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. இப்படி நல்ல நல்ல சுலோகன்களை உருவாக்கி மனிதர்களை விழிப்படையச் செய்ய வேண்டும். மீண்டும் தெய்வீக இராஜ்யத்தை வந்து அடையுங்கள். இப்போது நீங்கள் எவ்வளவு நல்ல விதமாகப் புரிந்து கொள்கிறீர்கள். கிருஷ்ணரை சியாம் சுந்தர் என ஏன் சொல்கின்றனர் என்பதை யும் இப்போது நீங்கள் அறிவீர்கள். இன்றைய நாட்களில் நிறையபேர் இப்படி பெயரை வைத்து விடுகின்றனர். கிருஷ்ணருடன் போட்டியிடுகின்றனர். தூய்மையற்ற இராஜாக்கள் தூய்மையான இராஜாக்கள் முன்பாக சென்று எப்படி தலை வணங்கு கின்றனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் கொஞ்சமும் அவர்களுக்கு புரிவதில்லை. பூஜைக்குரியவர்கள் தான் பூஜாரிகள் ஆகின்றனர் என்று குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். இப்போது உங்கள் புத்தியில் முழு சக்கரமும் உள்ளது. இது நினைவில் இருந்தாலும் கூட நிலை மிகவும் நன்றாக இருக்கும். ஆனால் மாயை சிந்தனை செய்ய விடுவதில்லை. மறக்கடித்து விடுகின்றது. எப்போதும் மகிழ்ந்த முகத்தின் நிலை (தோற்றம்) இருந்தாலும் கூட உங்களை தேவதைகள் என்று சொல்லலாம். இலட்சுமி நாராயணரின் படத்தைப் பார்த்து எவ்வளவு குஷியடைந்து விடுகின்றனர்! ராதா கிருஷ்ணர் அல்லது இராமன் முதலானவர்களைப் பார்த்து இவ்வளவு குஷி அடைவதில்லை, ஏனெனில் ஸ்ரீகிருஷ்ணருக்குத்தான் சாஸ்திரங்களில் குழப்பங்களின் விசயங்களை எழுதி உள்ளனர். இந்த பாபா (பிரம்மா) கூட ஸ்ரீ நாராயணர் ஆகிறார் அல்லவா ! பாபா இந்த இலட்சுமி

நாராயணரின் படத்தைப் பார்த்து குஷியடைகிறார். குழந்தைகள் கூட இப்படி புரிந்து கொள்ள வேண்டும் - இன்னும் எவ்வளவு சமயம் இந்த பழைய சரீரத்தில் இருப்போம், பிறகு சென்று இளவரசன் ஆகப் போகிறோம். இது இலட்சியம் அல்லவா? இதையும் கூட நீங்கள் மட்டுமே அறிவீர்கள். குஷியில் எவ்வளவு குதூகலம் அடைய வேண்டும்! எந்த அளவு படிக்கிறீர்களோ, அந்த அளவு உயர்ந்த பதவி அடைவீர்கள், படிக்காவிட்டால் என்ன பதவி கிடைக்கும்? எங்கே உலகின் மஹாராஜா- மஹாராணி, எங்கே பணக்காரர், பிரஜைகளின் வேலைக்காரர்கள். ஒரே பாடம் தான். மன்மனாபவ, மத்யாஜி பவ, அல்லா மற்றும் ஆஸ்தி, நினைவு மற்றும் ஞானம். இவருக்கு எவ்வளவு குஷி இருந்தது - அல்லா கிடைத்ததும் இருந்த அனைத்தையும் கொடுத்து விட்டார்! எவ்வளவு பெரிய லாட்டரி கிடைத்து விட்டது. மற்றபடி வேறு என்ன தேவை? ஆக குழந்தைகளுக்குள் ஏன் குஷி இல்லை? ஆகையால் பாபா சொல்கிறார் - இது போன்ற டிரான்ஸ் லைட்டால் ஆன (ஒளியூட்டப் பட்ட) படங்கள் அனைவருக்காகவும் உருவாக்க வேண்டும், அதனைக் கண்டு குழந்தைகள் குஷி அடைவார்கள். சிவபாபா பிரம்மாவின் மூலம் நமக்கு இந்த ஆஸ்தியைக் கொடுத்துக் கொண்டிருக் கிறார். மனிதர்களுக்கு ஒன்றும் தெரியாது. முழுக்க முழுக்க துச்ச புத்தியுடையவர்களாக உள்ளனர். இப்போது நீங்கள் துச்ச புத்தியிலிருந்து சுத்தமான புத்தியுள்ளவராக ஆகிக் கொண்டி ருக்கிறீர்கள். அனைத்தையும் அறிந்து கொண்டு விட்டீர்கள், வேறு எதையும் படிக்க வேண்டிய அவசியமில்லை. இந்தப் படிப்பின் மூலம் உங்களுக்கு உலகின் அரசாட்சி கிடைக்கிறது, ஆகையால் தந்தையை ஞானம் நிறைந்தவர் என்று சொல்கின்றனர். பிறகு ஒவ்வொருவரின் மனதையும் அறிந்தவர் என்று மனிதர்கள் புரிந்து கொள்கின்றனர். ஆனால் தந்தை ஞானத்தைக் கொடுக்கிறார். இன்னார் நன்றாகப் படிக்கின்றனர் என்று ஆசிரியர் புரிந்து கொள்ள முடியும், மற்றபடி முழு நாளிலும் இவர்களின் புத்தியில் என்ன நடக்கிறது என்பதை அமர்ந்து பார்க்கப் போவதில்லை. இது அதிசயமான நாடகமாகும். தந்தை ஞானக் கடல், சுகம் அமைதியின் கடல் என்று சொல்லப் படுகிறார். நீங்களும் கூட இப்போது மாஸ்டர் ஞானக்கடல் ஆகிறீர்கள். பிறகு இந்தப் பட்டம் (மாஸ்டர் ஞானக்கடல்) இல்லாமல் போய் விடும். பிறகு அனைத்து குணங்களும் நிரம்பியவர், 16 கலைகளில் நிரம்பியவர் ஆகப் போகிறீர்கள். இது மனிதரின் உயர்ந்த பதவியாகும். இந்த சமயம் இது ஈஸ்வரிய பதவியாகும். எவ்வளவு புரிந்து கொண்டு மற்றும் புரிய வைக்க வேண்டிய விசயங்கள். இலட்சுமி நாராயணரின் படத்தைப் பார்த்து மிகவும் குஷியடைய வேண்டும். நாம் இப்போது உலகின் எஜமான் ஆகப் போகிறோம். ஞானத்தின் மூலமே அனைத்து குணங்களும் வருகின்றன. தமது இலட்சியம் குறிக்கோளைப் பார்க்கும்போதே புத்துணர்வு வந்து விடுகிறது. ஆகையால் இந்த இலட்சுமி நாராயணரின் படம் அனைவரிடமும் இருக்க வேண்டும் என்று பாபா சொல்கிறார். இந்தப் படம் உள்ளத்தில் அன்பைப் பெருக்குகிறது. இந்த மரண லோகத்தில் இது கடைசிப் பிறவி, அவ்வளவு தான் என்று மனதில் படுகிறது. பிறகு அமர லோகத்தில் இப்படி ஆகப்போகிறேன், ததத்துவம் (நானே அது,...) ஆத்மாவே பரமாத்மா என்பதல்ல. இந்த ஞானம் முழுமையாக புத்தியில் அமர்ந்திருக்க வேண்டும். எப்போது யாருக்கு புரிய வைத்தாலும் அவர்களுக்கு சொல்லுங்கள் நாங்கள் ஒருபோதும் பிச்சை கேட்பதில்லை. பிரஜாபிதா பிரம்மாவின் குழந்தைகள் பலர் இருக்கின்றனர். நாங்கள் எங்களுடைய உடல், மனம், பொருள் மூலம் சேவை செய்கிறோம். பிராமணர்கள் தமது வருமானத்தின் மூலமே யக்ஞத்தை நடத்திக்

கொண்டிருக் கிறோம். சூத்திரர்களின் பணத்தைப் பயன்படுத்த முடியாது. எவ்வளவு நாம் உடல், மனம், பொருளினால் சேவை செய்வோமோ, சரண்டர் ஆகுவோமோ அவ்வளவு பதவி அடைவோம் என்பதை நிறைய குழந்தைகள் தெரிந்திருக்கின்றனர். பாபா விதை விதைத்திருக்கிறார் எனில் இந்த இலட்சுமி நாராயணர் ஆவோம் எனத் தெரிந்திருக்கின்றனர். பணம் இங்கே உதவப் போவதில்லை எனும்போது ஏன் இந்த காரியத்தில் ஈடுபடுத்தக் கூடாது? பிறகு சமர்ப்பணம் ஆகிறவர்கள் பட்டினியால் இறந்து விடுகிறார்களா என்ன? மிகவும் நல்ல கவனிப்பு கிடைத்துக் கொண்டிருக்கிறது. பாபாவுக்கு (பிரம்மா பாபா) எவ்வளவு கவனிப்பு இருந்து கொண்டிருக்கிறது. இவர் சிவபாபாவின் இரதம் அல்லவா? முழு உலகையும் சொர்க்கமாக்குபவர். இவர் அழகான பிரயாணி ஆவார்.

பரமபிதா பரமாத்மா வந்து அனைவரையும் அழகானவர்களாக ஆக்குகிறார், நீங்கள் கருப்பான வரிலிருந்து அழகானவராக ஆகின்றீர்கள்தானே! எவ்வளவு அழகான தலைவனாக இருக்கிறார், வந்து அனைவரையும் அழகாக (வெள்ளையாக) ஆக்கி விடுகிறார். அவரிடம் பலியாகி விட வேண்டும். பார்வைக்கு ஆத்மாவும் பரமாத்மாவும் ஒரேபோல ஒளிப்புள்ளிதான். மற்றபடி முழு ஞானமும் இருக்கிறது. இது மிகவும் புரிந்து கொள்ள வேண்டிய விசயமாகும். குழந்தைளின் புத்தியில் இதை குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். புத்தியில் வரிசைக்கிரமமான முயற்சியின்படி தாரணை ஆகிறது. மருத்துவர்களுக்கும் மருந்துகளின் பெயர் நினைவில் இருக்கும் அல்லவா? அந்த சமயத்தில் அமர்ந்து புத்தகம் படிப்பதில்லை. மருத்துவப்படிப்பின் விசயங்களும் இருக்கின்றன, வக்கீல் படிப்பிலும் விசயங்கள் இருக்கின்றன. உங்களிடமும் ஞானக் கருத்துகள் இருக்கின்றன், பல தலைப்புகள் இருக்கின்றன, அதைக் குறித்து புரிய வைக்கிறீர்கள். சில கருத்துகள் சிலருக்கு இலாபத்தை உண்டாக்குகிறது, சிலருக்கு சில கருத்துகளால் அம்பு தைத்து விடுகிறது. கருத்துக்கள் ஏராளமாக இருக்கின்றன. யார் நல்ல விதமாக தாரணை செய்கின்றனரோ அவர்கள் நல்ல விதமாக சேவை செய்ய முடியும். அரைக் கல்ப காலமாக மிகப் பெரிய வியாதியால் நோயாளியாக இருக்கின்றனர். ஆத்மா பதீதமாகி விட்டது, அதற்கு ஒரு அழிவற்ற சர்ஜன் மருந்து கொடுக்கிறார். இவர் எப்போதும் சர்ஜனாகவே இருக்கிறார், ஒருபோதும் நோயாளி ஆவதில்லை. மற்ற அனைவரும் நோயாளி ஆகிவிட்டனர். அழிவற்ற சர்ஜன் ஒரே முறை வந்து மன்மனாபவ என்ற ஊசியைப் போடுகிறார். எவ்வளவு சகஜமானது! படத்தை எப்போதும் சட்டைப் பையில் வையுங்கள். பாபா நாராயணரின் பக்தராக இருந்த போது இலட்சுமியின் படத்தை நீக்கி நாராயணரின் படத்தை மட்டும் வைத்து விட்டார். இப்போது, யாருக்கு பூஜை செய்து கொண்டிருந்தோமோ அவராகவே ஆகிக் கொண்டிருக்கிறோம் என்று தெரிந்து விட்டது. இலட்சுமிக்கு விடை கொடுத்து விட்டார் எனும்போது நான் இலட்சுமி ஆகப் போவதில்லை என்பது உறுதியாகி விட்டது. இலட்சுமி அமர்ந்து காலை அமுக்குவது என்பது நன்றாக இருக்கவில்லை. அவரைப்பார்த்து கணவன்மார்கள் மனைவிமார்களை கால் அமுக்க வைத்தனர். அங்கே (சத்யுகத்தில்) இலட்சுமி இப்படி கால் அமுக்க மாட்டார். இந்தப் பழக்கம் அங்கே இருக்காது. இந்த பழக்கம் இராவண இராஜ்யத்தினுடையதாகும். இந்தப் படங்களில் அனைத்து ஞானமும் உள்ளது. மேலே திரிமூர்த்தியும் இருக்கிறார், இந்த ஞானத்தை முழு நாளும் சிந்தனை செய்து மிகவும் அதிசயம் ஏற்படுகிறது!

பாரதம் இப்போது சொர்க்கமாக ஆகிக் கொண்டி ருக்கிறது. எவ்வளவு நல்ல விழிப்புணர்வு, மனிதர்களின் புத்தியில் ஏன் பதிவதில்லை என்று தெரியவில்லை. மிகவும் வேகமாக தீ பற்றப் போகிறது, வைக்கோலில் தீ பற்றப் போகிறது. இராவண இராஜ்யம் கண்டிப்பாக முடிய வேண்டும். யக்ஞத்திலும் தூய்மையான பிராமணர்கள் தேவை. இது முழு உலகிலும் தூய்மையைக் கொண்டுவருவதற்கான மிகப் பெரிய யக்ஞமாகும். அந்த பிராமணர்களும் பிரம்மாவின் வாரிசுகள் என்று சொல்லிக் கொள்கின்றனர், ஆனால் அவர்கள் கர்பத்தின் மூலம் பிறவி எடுத்த வம்சாவளியினர். பிரம்மாவின் குழந்தைகள் தூய்மையான வாய் வழி வம்சாவளியாக இருந்தனர் அல்லவா? ஆக, அவர்களுக்கு இதைப் புரிய வைக்க வேண்டும். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. தூய புத்தியுள்ளவராகி அதிசய ஞானத்தை தாரணை செய்து தந்தைக்கு சமமாக மாஸ்டர் ஞானக் கடல் ஆக வேண்டும். ஞானத்தின் மூலம் அனைத்து குணங்களையும் தனக்குள் தாரணை செய்ய வேண்டும்.

2. எப்படி பாபா உடல், மனம், பொருளை சேவையில் ஈடுபடுத்தினார், சமர்ப்பணம் ஆனார், அது போல தந்தைக்கு சமமாக தனது அனைத்தும் ஈஸ்வரிய சேவையில் பயனுள்ளதாக்க வேண்டும். எப்போதும் புத்துணர்வுடன் இருப்பதற்காக இலட்சியம் மற்றும் குறிக்கோளின் படத்தை உடன் வைத்துக் கொள்ள வேண்டும்.

வரதானம் : ஏக்ரஸ் ஸ்திதி மூலம் சதா ஒரு பாபாவைப் பின்பற்றக்கூடிய மகிழ்ச்சி நிறைந்தவர் ஆகுக.

குழந்தைகளாகிய உங்களுக்காக பிரம்மா பாபாவின் வாழ்க்கை மிகச்சரியான கம்ப்யூட்டராகும். எப்படி இப்போது கம்ப்யூட்டர் மூலம் ஒவ்வொரு கேள்விக்கான பதிலைக் கேட்கிறார்கள். அது போல் மனதில் எப்போதெல்லாம் ஏதேனும் கேள்வி எழுகிறதோ, அப்போது என்ன, ஏன், எப்படி என்பதற்கு பதிலாக பிரம்மா பாபாவின் வாழ்க்கை ரூப கம்ப்யூட்டரில் இருந்து பாருங்கள். என்ன மற்றும் எப்படி என்ற கேள்வி இப்படி என்று மாறி விடும். கேள்வி கேட்பவராக இருப்பதற்கு பதில் மகிழ்ச்சி நிறைந்தவராக ஆகி விடுவீர்கள். மகிழ்ச்சி நிறைந்தவர் என்றால் ஏக்ரஸ் ஸ்திதியில் ஒரு பாபாவைப் பின்பற்றுபவர்கள்.

சுலோகன்: ஆத்மிக சக்தியின் ஆதாரத்தில் சதா ஆரோக்கியமாக இருப்பதற்கான அனுபவம் செய்யுங்கள்.

விசேஷ குறிப்பு : பிரம்மாவின் குழந்தைகள் அனைவரும் 1 ஜனவரி முதல் 31 ஜனவரி 2025 வரை விசேஷமாக உள்முக நோக்கின் குகையில் அமர்ந்து யோக தபஸ்யா செய்தவாறு முழு உலகிற்கும் தங்களின் சக்திசாலி மனதின் மூலம் விசேஷ சகாஷ் கொடுப்பதற்கான சேவை செய்ய வேண்டும். இதே லட்சியத்தோடு இந்த மாத பத்திரபுஷ்பத்தில் அனுப்பப்பட்டுள்ள அவ்யக்த

சமிக்ஞைகளை ஜனவரி மாதம் முழுவதும் முரளிக்குக் கீழேயும் எழுதுகிறோம். நீங்கள் அனைவரும் இந்தப் பாயின்ட்டுகள் பற்றி விசேஷமாக ஆழமான சிந்தனை செய்து மனசா சேவையின் அனுபவி ஆக வேண்டும்.

தனது சக்திசாலியான மனதின் மூலம் சக்தி கொடுக்கும் சேவை செய்யுங்கள்

சாந்தி தூதர்களாகிய குழந்தைகள் நீங்கள் எங்கே இருந்தாலும், நடமாடும் போதும் சுற்றி வரும் போதும் சதா தன்னை சாந்தி தூதன் எனப் புரிந்து கொண்டு செல்லுங்கள். சுயம் சாந்த சொரூபம், சக்திசாலி சொரூபத்தில் நீங்கள் நிலைத்திருக்கும் போது, அது மற்றவர்களுக்கும் கூட சாந்தி மற்றும் சக்தியின் சகாஷ் கொடுத்துக் கொண்டே இருக்கும்.